போல் பெரேய்ரா யோர்க் தெற்கு - வெஸ்ரன் பகுதியின் பெருமைப்படத் தக்க குடியிருப்பாளன். மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரான போல் பெரேரா உழகைக்கும் குடும்பங்களுக்காக வலுவாகக் குரல் எழுப்பி வாதிடுபவர்.

2007 பெப்ருவாரி 8ஆந்திகதி போல் தெரிவு செய்யப்பட்டது முதலாக அவர் மாற்றங்களைச் செய்துள்ளார். அவர் வாடகையாளருக்கான குறைந்த பட்ச கட்டளைப்படிஅளவு குடியிருப்பிட வீட்டுரிமையாளர் உரிமைப்பத்திரச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதோடு, வீட்டுரிமையாளர் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதையும் தீவிரப்படுத்தியுள்ளார். சமூகத்தைப் பாதியாகப் பிரித்து, வெஸ்ரேனுக்கும் மவுன்ட் டெனிஸுக்கும் இடையில் அமைந்த புகையிரதவீதி நீலம் 22 புகையிரதத் திட்டத்டதையும் அவர் எதிர்க்கின்றார்.

போல் எப்போதும் உள்ளக மக்களின் விடயங்களை எடுத்து வாதிடுவதில் தன்னை அர்ப்பணிப்பவர். ''வெஸ்ரன் வீதியை மீட்டெடு'' என்ற அமைப்பை உருவாக்கி அதனை முன்னின்று நடத்தி, ஒவ்வொருவரும் நல்ல வேலையைத் தேடிக்கொள்ள உதவுகின்றார். அவர் 'வெஸ்ரேன் - கிங் சூழ்வட்டார நிலையத்தின் ''கற்கை மேம்பாடு நிறுவனம்'', ''வெஸ்ரேன் வரலாற்சுச் சங்கம்'' என்பனவற்றின் உறுப்பினராகவும், அவற்றுக்கு உதவுநராகவும் உள்ளார். உள்ளூர் சிறிய பேஸ்போல் கழகத்தினருக்கு ஆதரவு வழங்குவதோடு, கடந்த மூன்றாண்டுகளாகச் சமூகச் சுற்றாடல் சுத்திகரிப்புத் தினத்தை ஏற்படுத்தி, அதனைச் செயற்படுத்தி வருபவர்.

எங்களிற் பெரும்பான்மையினரைப் போன்று போல் பெரேராவும் யோர்க் தெற்கு-வெஸ்ரன் பகுதியில் குடியேறியவர்களில் ஒருவராவர். ஆறு வயதாக இருக்கும்போது அவர் போர்த்துக்கல் நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்தார். அவர் கால்ரன் பல்கலைக்கழக இதழியல் கல்லூரியின் பட்டதாரி ஆவார். பாராளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு 'கனேடிய பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான கழகத்தில்' வேலை செய்தார்.

உழைக்கும் குடும்பங்களுக்காகத் தொடர்ந்து அவர் போராடுவதற்கு உதவியாக, போல் பெரேரா ஒக்டோபர் 10 ஆந் திகதி உங்களது ஆதரவை நாடி நிற்கிறார்.